**BHARATHIYAR UNIVERSITY, COIMBATORE – 641046**

UNDER GRADUATE DEGREE PROGRAMMES (CBCS SEMESTER PATTERN)

( For the students admitted during the academic year 2015 – 2016 and onwards)

**பாடத்திட்டம் - முதற்பருவம் - பகுதி -1. தாள் 1**

(2015 - 16 ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது (செய்யுள் . சிறுகதை , இலக்கிய வரலாறு, இலக்கணம் , மொழிபெயர்ப்பு)

அலகு 1

1. பாரதியார் - தமிழ்த்தாய், தமிழ்
2. பாரதிதாசன் - அழகின் சிரிப்பு
3. நாமக்கல் கவிஞர் - தமிழ்வழி அரசு
4. ஆரூர் தமிழ்நாடன் - கரிக்கிறது தாய்ப்பால்
5. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை - ஒற்றுமை , இலக்கிய மும்மணி

அலகு 2 **சமூகம்**

6. நவீன தாலாட்டு - வைரமுத்து
7. சாவிலா வீட்டில் - கண்ணதாசன்
8. சருகுகள் சலசலக்கின்றன - வெ.இறையன்பு
   ஒரு கல்லின் கதை
9. மு. மேத்தா கவிதைகள் - மு.மேத்தா
10. ரிஷி கவிதைகள் - முடிந்தது , இங்கே, படைப்பு, மதி, தாகம்

அலகு -3 **உதயம் - சிறுகதைத் தொகுப்பு**

பிரிசாட் பப்ளிகேஷன்ஸ், சென்னை.

அலகு - 4 **இலக்கிய வரலாறு** - ( பாடத்திட்டத்தைத் தழுவியது)

1. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்
2. சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்
3. படிமம் , குறியீடு - பற்றிய விளக்கங்கள்
4. இலக்கணம்
   1. மொழித்திறன், சொற்பொருள் வேறுபாடு, ர,ற, ல.ள.ழ. ந.ண.ன, வேறுபடுத்தி அறியும் முறை
   2. தொடரில் வழூஉச் சொற்களை நீக்கி எழுதுதல்
   3. உண்டு , உள, உளது, அன்று, அல்ல, அல்லன், அல்லர், பயன்பாடு, ஒரு, ஓர் - பயன்பாடு
   4. ஒருமை - பன்மை - தொடரில் அமையும் விதம்

**அலகு - 5** மொழி பெயர்ப்பு , பொதுப்பகுதி, அலுவலகப்பகுதி - ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழிபெயர்த்தல்.

**முதற்பருவம் - பகுதி -1. தாள் - 1.**

**வினாத்தாள் அமைப்பு**

நேரம் 3 மணி மொத்த மதிப்பெண்கள் 75

**பிரிவு -அ**

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 10 x 1 = 10
( நான்கு அலகுகளிலிருந்தும் கேட்கப்பட வேண்டும் )

**பிரிவு -ஆ**

இரு பக்க அளவில் விடையளி 5 x 5 = 25
செய்யுள் - 3 வினாக்கள்
சிறுகதை - 1 வினா
இலக்கிய வரலாறு --1 வினா

**பிரிவு - இ**

கட்டுரை வடிவில் விடை எழுதுக 5 x 8 = 40

செய்யுள் - 2 வினாக்கள்
சிறுகதை - 1 வினா
இலக்கிய வரலாறு -1 வினா
மொழி பெயர்ப்பு - 1 வினா

குறிப்பு : ஆ. இ. பிரிவுகளில் வினாக்கள் ‘ இது’ அல்லது ‘அது’ என்ற வகையில் அமைதல் வேண்டும்.

அ பிரிவில் அனைத்து வினாக்களும் நான்கு அலகுகளிலிருந்தும் கேட்கப்படல் வேண்டும்.

## 1. தமிழ்த் தாய்

**தன் மக்களைப் புதிய சாத்திரம் வேண்டுதல்**
**(தாயுமானவர் ஆனந்தக்களிப்புச் சந்தம் )**

ஆதிசிவன் பெற்று விட்டான்-என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே-நிறை
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான். 1
மூன்று குலத்தமிழ் மன்னர்-என்னை
மூண்டநல் லன்பொடு நித்தம் வளர்த்தார்;
ஆன்ற மொழிகளி னுள்ளே-உயர்
ஆரியத் திற்கு நிகரென வாழ்ந்தேன். 2
கள்ளையும் தீயையும் சேர்த்து-நல்ல
காற்றையும் வான வெளியையும சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள்-பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார். 3
சாத்திரங் கள்பல தந்தார்-இந்தத்

தாரணி யெங்கும் புகழ்ந்திட வாழ்ந்தேன்
நேத்திரங் கெட்டவன் காலன்-தன்முன்
நேர்ந்த தனைத்தும் துடைத்து முடிப்பான். 4
நன்றென்றுந் தீதென்றும் பாரான்-முன்பு
நாடும் பொருள்கள் அனைத்தையும் வாரிச்
சென்றிடுங் காட்டுவெள் ளம்போல்-வையச்
சேர்க்கை யனைத்தையும் கொன்று நடப்பான். 5
கன்னிப் பருவத்தில் அந்நாள்-என்தன்
காதில் விழுந்த திசைமொழி யெல்லாம்
என்னென்ன வோபெய ருண்டு-பின்னர்
யாவும் அழிவுற் றிறந்தன கண்டீர்! 6
தந்தை அருள்வலி யாலும்-முன்பு
சான்ற புலவர் தவவலி யாலும்
இந்தக் கணமட்டும் காலன்-என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சி யிருந்தான். 7
இன்றொரு சொல்லினைக் கேட்டேன்-இனி
ஏதுசெய் வேன்?என தாருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை-இங்கு
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்! 8
"புத்தம் புதிய கலைகள்-பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே-அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.9
சொல்லவும் கூடுவ தில்லை-அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை;
மெல்லத் தமிழினிச் சாகும்-அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்" 10
என்றந்தப் பேதை உரைத்தான்-ஆ!
இந்த வசையெனக் கெய்திட லாமோ?
சென்றிடு வீர் எட்டுத் திக்கும்-கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்! 11
தந்தை அருள்வலி யாலும்-இன்று
சார்ந்த புலவர் தவவலி யாலும்
இந்தப் பெரும்பழி தீரும்-புகழ்
ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன். 12

**2. தமிழ்**

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்;
பாமர ராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டுஇங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும். 1

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை;
உண்மை, வெறும் புகழ்ச்சி யில்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்;ஒருசொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்! 2

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்;
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும். 3

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்;
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

**6. நவீன தாலாட்டு - <u>வைரமுத்து</u>**

**சோலைக்கு பிறந்தவளே!**
**சுத்தமுள்ள தாமரையே!**
**வேலைக்கு போகின்றேன் - வெண்ணிலவே கண்ணுறங்கு!**

அலுவலகம் விட்டு -
அம்மா வரும் வரைக்கும் -
கேசட்டில் தாலாட்டு - கேட்டபடி கண்ணுறங்கு!

ஒரு மணிக்கு ஒரு பாடல்
ஒளிபரப்பும் வானொலியில்
விளம்பரங்கள் மத்தியில் - விழி சாத்தி நீயுறங்கு!

9 மணி ஆனால் உன் அப்பா சொந்தமில்லை -
9:30 மணி ஆனால் உன் அம்மா சொந்தமில்லை -
ஆயாவும் தொலைக்காட்சியும் அசதியில் தூங்கிவிட்டால் -
தூக்கத்தை தவிர துணைக்கு வர யாருமில்லை!

20-ம் நூற்றாண்டில் என் கருவில் வந்தவளே!
இது தான் கதியென்று - இன்னமுதே கண்ணுறங்கு!

தூரத்தில் இருந்தாலும் தூயவளே -
உன் தொட்டில் ஓரத்தில் -
என் நினைவு - ஓடிவரும் கண்ணுறங்கு!

பேருந்தில் நசுங்கி, பிதுங்கி போகிற வேளையிலும்
எடை கொஞ்சம் இழந்து இறங்குகின்ற வேளையிலும்
பூப்பூவாய் உனது முகம் புறப்பட்டு வரும் கண்ணே!

தந்தை வந்து கொஞ்சுவதாய் -
தங்க மடியில் தூங்குவதாய் -
கண்ணனே கண்மணியே - கனவு கண்டு - நீயுறங்கு!

புட்டிபால் குறையவில்லை -
பொம்மைக்கும் பஞ்சமில்லை -
தாய்ப்பாலும் தாயும் இன்றி -
தங்க மகனுக்கு என்ன குறை?

மாலையிலே ஓடி வந்து
மல்லிகையே உன்னை அணைத்தால்
சுரக்காத மார்பும் சுரக்குமடி- கண்ணுறங்கு!

தாலாட்டு பாட்டில் தளிரே - நீ
தூங்கிவிட்டால் கோலாட்டம் ஆட
கொண்டவனுக்கும் ஆசை வரும்!

உறவுக்கு தடையாக
'ஓ' என்று அலறாமல் -
இரவுக்கும் மிச்சம் வைத்து
இப்போது - நீ உறங்கு!

தாயென்று காட்டுவதற்கும்
தாவி எடுப்பதற்கும்
ஞாயிற்றுக்கிழமை வரும் - நல்லவளே கண்ணுறங்கு!

## 7. சாவிலா வீட்டில்- கண்ணதாசன்

(ஓர் ஆலமரத்தடி புத்தர் அமர்ந்திருக்கிறார், எதிரே சீடர்கள்.)
ஆலமரத்திலிருந்து உதிர்ந்த பழுப்பிலை ஒன்று மெதுவாகக் காற்றில் அலைந்து கீழே வருகிறது. புத்தர் அதையே பார்க்கிறார். இலை கீழே விழுகிறது. அவர் முகத்தில் புன்னகை படர்கிறது.)

சீடரை நோக்கி . . .

புத்தர் : உயிரிற் பிறந்து
உயிரிற் கலந்த
உத்தமச் சீடரீர்!
தத்துவம் கேண்மினோ ;
அன்பே மூலம் ;
அன்பே வையகம்
அன்பின் சக்தியே
ஆண்டவன் தத்துவம் !
அறமெனப் படுவது
அகிம்சை ஒன்றுதான் !
உயிர்கள் அனைத்துமே
ஒன்றெனக் கொள்ளுவீர் !
ஜனனம் நாயகன்
தரணிக் களித்தது ;
மரணம் அதை அவன்
மறுபடிஅழைப்பது !
இடையிற் கிடைப்பது
இளமையும் செல்வமும் ;
தாரணி வாழ்க்கையைத்
தணிக்கை செய்வதே
மூப்பும் பிணியும்
முனகலும் கவலையும் !
முடிவில் லாதவன்
மூல முதல்வனே!
மன்னும் உயிர்கள்
மறைவது இயற்கை ;
மரணம் வருமுன்
மயக்கம் நீங்குக !
தத்துவ ஞானச்
சரக்கினை ஏற்றி
புத்தனின் கலங்கள்
பூமியை வெல்லுக!

சத்தியம் ஜெயமே!
சத்தியம் ஜெயமே!
புத்தனின் தத்துவம்
பொய்ப்பதே இல்லை! . . .
புத்தம் சரணம் கச்சாமி . ..
புத்தம் சரணம் கச்சாமி . . .
தர்மம் சரணம் கச்சாமி

( தலைவிரி கோலமாக பதறியபடி, கிருஷ்ண கௌதமி என்ற பெண் ஓடி வந்து . . . )

கி.கௌதமி புத்த தேவா!
புத்த தேவா!
புத்: யாரது மகளே,
கி.கௌதமி புத்த தேவா!
புத்த தேவா!
புத்: யாரது மகளே,
என்னநின் துயரம்?
கண்ணிலேன் கண்ணீர்?
கலைந்ததேன் கூந்தல்?
கையிலென் குழந்தை?
காரணம் கூறுக!
கி.கௌதமிஐயனே! தேவனே!
அன்பின் நாயக !
ஐயிரு திங்கள்யான்
அங்கம் கலங்க
பையவே ஈன்று
பரிந்தஎன் செல்வன்,
மரகதத் தொட்டிலும்
மாணிக்கக் கட்டிலும்
மின்னும் என் மனையில்
விளையாட வந்தவன்,
பல்லாண்டு தவத்தில்
பாலித்த குழந்தை
இல்லா தொழிந்தாள் . . .
புத் . . . . . . . . . . . . . . .
எவ்வகை மரணம்?
கி.கௌ நாகம் கடித்தது :
நாழிகை யொன்றில்
தேகம் படுத்தது

சென்றதே ஆவி
புத் நல்லது இதிலே
நானென் செய்வது ?
கி.கௌ:வல்லவன் நீயே
வையகம் அறியும்!
பிள்ளையின் உயிரைப்
பிழைக்க வைப்பது
உன்கையி லுண்டாம்
உலகம் சொன்னது!
(புத்தர் புன்னகை)
புத் ஜனனம் உன்வழி
தாயே! இவனது
மரணம் அவன்வழி !
மற்றிதன் நடுவே
இவனைத் தருவது
என்வழி யல்லவே **!...**
கி.கௌ:முடியும் உன்னால் . ..
முடியும் உன்னால்
புத் ஆயின் நல்லது
அன்னையே நீபோய்
ஊரில் உளவோர்
ஆயிரம் மனையில்
சாவிலா வீட்டில் . . .
சாம்பல் வாங்கிவா!
சாம்பல் வந்ததும்
தருகிறேன் உயிரைநான்
கி.கௌ:நல்லது நாயக!
நல்லது நாயக !
சாம்பல் தானே ?
புத்: சாவிலா வீட்டில் !
கி.கௌ:தருகிறேன் உடனே
புத்: விரைவில் ஓடிவா

(கிருஷ்ண கௌதமி புறப்படுகிறாள், ஓடிவந்து ஒரு வீட்டின் முன் நிற்கிறாள். அங்கிருக்கும் பெண்ணிடம்)

கி.கௌ : ஆயர் மகளே
ஆயர் மகளே
மரணம் ஏதும்உன்
மனையில் நிகழ்ந்ததா?

பெண் : ஆயிரம் மரணம்
ஆயிரம் மரணம்
கி.கௌ:அவ்வகை யாயின்
உன்னிடம் பயனிலை !
(திரும்புகிறாள் வேறு வீடு)
கி.கௌள: சாவிலா வீட்டிலோர்
சாம்பல் வேண்டும்
தாயே உன்மனை
சாவைக் கண்டதா?
பெண்: நாயகன் இறந்து
நாலுநாள் ஆனது
(வேறு வீடு)
பெண் : பாலகன் இறந்து
பத்து நாள் ஆனது
(வேறு வீடு)
பெண் : தந்தை இறந்த
சடங்கு இன்றுதான்
(வேறு வீடு)
பெண் : அனைவரும் மாண்டனர்
அடியாள் மீதம் . . .
(கிருஷ்ண கௌதமி மீண்டும் புத்தரிடம் ஓடி வருகிறாள்)
கி.கௌ:புத்த தேவனே
புத்த தேவனே
புத் : பொறுமை! மகளே
போய்வந் தாயா ? . . .
கி.கௌ : மரணம் இலாததோர்
மனையே இலையே . . .
புத் : இதுதான் உலகின்
இறுதித் தத்துவம்
கணவன் கொடுத்தது
ஒருதுளி இரத்தம்
கண்களும் கைகளும்
இறைவனின் சித்தம்
வாழ்க்கை என்பது
மனிதர்கள் சத்தம்
மரணம் என்பது
மறைவது மொத்தம்
ஆசை, காமம்
அச்சம், வெகுளி,

பாசம், பந்தம்
பகைமை, உறவு
வேஷம், அனைத்தும்
மென்மொழி மகளே
பசயிா வயிறு
பார்த்ததுண் டாநீ?
பச்சைக் குழந்தை
பாலென அழவும்
பருவம் வந்ததும்
காமப் பசியும்
சேர்ந்த குடும்பத்துச்
செல்வப் பசியும்
பாவிகள் தேடும்
பதவிப் பசியும்
பசியில் பலவகை
பசியில் லாவிடில்
பகையும் இல்லை
உறவுகள் இல்லை
காமம் உலகைக்
கலக்கி எடுக்கும்
பசியோ அதற்குப்
பரிந்துரை யாடும்
இரண்டும் இலையேல்
இப்புவி இல்லை
ஆடும் வரைக்கும்
ஆடிய லைந்து
தேடும் பொருளைத்
தேடி விழுந்து
கூடும் மனையைக்
கூடிக் கலந்து
வாடும் மனிதனை
மரணம் அணைந்தால்
ஓடுதான் மிஞ்சுமா?
கோதாய் இப்புவி
வரவில் வைப்பது
மானிடப் பிறப்பு ;
செலவில் வைப்பது
ஜீவனின் இழப்பு !
கண்ணில் நீரும்

கலங்கிய மனமும்
கோழைகள் செயலாம் ;
குமைவதை நிறுத்து !
சாம்பல் தேடிய
தாயே! உன்மகன்
சாம்ப லாவதே
தத்துவ முடிவு!
அவனை நாடு!
அவனையே தேடு!
நாமும் போவது
நாயக னிடமே
காலம் வரும்வரை
கவலையை நிறுத்து !
புத்த தத்துவம்
பொய்த்ததும் இல்லை
போன குழந்தை
வருவதும் இல்லை

சீடர் : புத்தம் சரணம் கச்சாமி . . .
சங்கம் சரணம் கச்சாமி . . .
தர்மம் சரணம் கச்சாமி . . .

திரை

8. **சருகுகள் சலசலக்கின்றன ___ வெ. இறையன்பு பூபாளத்திற்கு ஒரு புல்லாங்குழல் என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது**

கவிதைகளுக்கு
மனித உரு படைக்கப்பட்டதாகவே
மக்கள் அவனை மதித்தார்கள்
தங்கள் எழுதுகோலை விளம்பரங்களில்
அவன்ஏந்துவதற்காகக் கூட
ஏராளமாய்ப் பணம் அவனுக்குப்
பரிசாய் நிறுவனங்கள் கொடுத்தன.
அவன் உதடுகள் உதித்தவைகளோ
காற்றில்
சங்கீத ஒலியாய்ப் பவனிவந்தன.
நடிகையர் படங்களைப் போல்
அவன் கவிதையெல்லாம்
இளைஞர்களால் பத்திரப்படுத்தப்பட்டன.
அவன்
எழுதிய வரிகளைப் படித்து
அவனுக்கே
போதை ஏறுவதுண்டு.

அது ஓர் அந்திப்பொழுது ;
சூரியன் மலையிடுக்கில்
ஒளிந்துகொள்ள அவனைத்தேட
நிலவுத் தேவதை
நீலவானில் நீந்தவிருக்கும்
மாலை நேரம்
கவிஞனும்
அவன் நண்பனும்
சோலையில் ஓரமாய்
நடைபயின்றனர்.
திட்டுத்திட்டாய் அந்தச் சோலையின்
சாலையில் தேங்கிய
குடிசைக் குடும்பங்கள்.
சோலையைக் கடந்து
வீதிக்கு வந்தனர்
கவிஞன்கேட்டான்
"மரகத ஆடைக்குள்
மறைந்து
புன்னகைப் பூக்களைப்
போர்த்தியிருக்கும
மரங்களைக் கண்டு
மகிழ்ந்தாயா?"
"தென்றல் ஊஞ்சலாடும்
தென்னை மரங்கள்
தலையசைவைக் கண்டு
மனம் நிறைந்தாயா?
விழுதுகளைக் கொண்டு
பூமியைத் தோண்டும்
ஆலமரங்கள் உன்
அடிமனத்தைத் தொடவில்லையா?
என் வார்த்தைகளை உன்னால்
ஏன்
கேட்க முடியவில்லை?
இயற்கையை இரசிக்க
இனியாவது கற்றுக்கொள்
இயந்திர வாழ்க்கையில்
இளைப்பாற !"
மௌனமாய் இருந்த
அந்த நண்பன்
கலங்கியவாறே
கலந்துரையாடினான்
"உன்னால் சோலையைப்

பார்க்க முடிந்தது
என் விழிகளின் வெளிச்சம்
அந்தச் சோலையின் முன்னே
சிதறிக்கிடந்த
சில குடும்பங்களின் மீதே
விழுந்தது”.
தென்றலுக்கே
தாக்குப்பிடிக்க மறுக்கும்
அந்தக் குடிசைகளை நினைத்து
என் மனத்தில்
புயலடித்தது .
ஆதி மனிதர்களாய்
இன்னும் சில குழந்தைகள்
வெளியே திரிந்ததைப் பார்த்து
என் உள்ளம் உறைந்து போனது
சிந்து சமவெளி நாகரிகச் சான்றாய்
கிடைத்த பொருள்களுக்குச்
சிறிதும் குறையாத
அவர்கள் பாத்திரங்கள் .
பசி அவர்களது நரகம்
உணவு சொர்க்கம்
என வாழும்
இதயங்களுக்காக
இரக்கப்பட்டதால்
இயற்கையை என்னால்
அணுக முடியவில்லை .
மன்னித்து விடு நண்பனே.”

## 11. ஒரு கல்லின் கவிதை

அவள் தெருவிலே புழுதியாய்க்
கிடந்த போது வாழ்த்த யாருமில்லை
அவள் பூவானபோது
வணங்கியவர்கள்
பூவாக்கியவனை மறந்தார்கள்
அந்தப்
பூவின் புலம்பல்

கல்லாய்க் கிடக்கும்போது
என்னைக்

கவனிக்க ஆளில்லை
சிற்பமான பிறகு
துதிக்க வருகிறார்கள்
சேற்றைத் தெளித்தவர்கள்தான்.

சந்தனத்தைப்
பூசுகிறார்கள்.
இருப்பது
தேரியாமல் இருட்டில்
மோதி விழுந்ததனால்
முணுமுணுத்துச்
சென்றவர்கள்
மோதிரம் அணிவித்து
மந்திரம் உச்சரித்து
கன்னத்தில் போட்டு
கையெடுத்துக்
கும்பிடுகிறார்கள்
இருட்டில் கிடந்ததனால்
விழி மழுங்கிப் போன
என்னை
வெளிச்சத்தில் வைத்து
விளக்கேற்றி
வைக்கின்றார்கள்
மகுடத்தைச் சூட்டுகிறார்கள்
குடம் பாலை
ஊற்றுகிறார்கள்
கல்லாகக் கிடக்கையிலே
கவனிக்க ஆளில்லை
என்னைச் சிலையாகச்
செதுக்கி,
கலையாக வடித்த
சிற்பியைத்தான் இன்னும்
விழிகொண்டு நானும்
வழியெங்கும் தேடுகிறேன்.

## 9. மு. மேத்தா கவிதைகள்

## ஊர்வலம் என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டவை.

## கேளுங்கள் கொடுக்கப்படும்

புதுக்கவிதை என்றால் என்ன?
இலக்கணச் செங்கோல்
யாப்புச் சிம்மாசனம்
எதுகைப் பல்லக்கு
மோனைத் தேர்கள்
தனிமொழிச்சேனை
பண்டித பவனி

இவை எதுவும்
இல்லாத
கருத்துக்கள் தம்மைத்
தாமே ஆளக்
கற்றுக் கொண்ட
புதிய மக்களாட்சி
முறையே
புதுக்கவிதை!

**2.தமிழ்த்தாயின் ஐம்பெரும் அணிகளில் வளையும் குண்டலமும் தொலைந்தது ஏன்?**

ஈரம் படிந்த
இலக்கிய நெல்லைக்
கொத்த வந்த
கடல்அலைக் கோழிகளை
விரட்டத்தான்
காதின் குண்டலத்தைக்
கழற்றி எறிந்தாளோ?
எறிந்த வேகத்தில்
கைவளையும் நழுவிக்
காணாமற் போனதுவோ?

**3.காதல் தோல்விகளின் காரணம் என்ன?**

அண்ணலும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்
இரண்டு பேரையும்
அடித்து நொறுக்குவதற்கு
அப்பன்காரனும்
நோக்கினான் !

**4. எப்படிப்பட்ட காலம் இது ?**

கண்ணீரில் நதி நடக்கும்
காலமடி காலம்!

கனவுகளும் தீப்பிடிக்கும்
காலமடி காலம்
சொன்னாலும் புரியாத
காலமடி காலம்
சோதனையில் தீக்குளிக்கும்
காலமடி காலம் !

## 5. இலட்சியம்

கால்பந்து விளையாடிக்
களைத்துப் போனபின்
விளையாட்டு வீரர்கள்
ஒருவரை ஒருவர்
உதைத்துக் கொண்டனர்.

பார்வையாளரும்
தமக்குள் உதைகளைப்
பரிமாறிக் கொண்டிருந்தார்.
மைதானத்தின்
எங்கோ ஒரு மூலையில்
பார்ப்பாரற்றுக்
கிடந்த
பந்து
பார்த்துச் சிரித்தது.

## 6. கி.பி. 2000

1999 ஆண்டுகளும்
அடுத்தடுத்த சவப்பெட்டிகளில் - -
தொட்டிலில்
இரண்டாயிரம் ஆண்டு!

"தேசமெங்கும்
திருவிழாக் கொண்டாடி
காதுகளையும் கண்களையும்
கிழித்துக் கொண்டிருந்தபோது
மௌனமாய் நான் ஒரு
தேதியைக் கிழித்தேன் !
ஆணியடித்து மாட்டினேன்
சில நம்பிக்கைகளையும்
ஒரு நாட்காட்டியையும்.. .
சிலுவையில் நான் !

## 7.இன்று முதல்

பூமியில்
நட்சத்திரங்களைப் பயிரிடு . . .
புல்லாங்குழல்களை
அறுவடை செய் . . .
பொங்கல் விழாக் கொண்டாடு!
கோவில்களில் மசூதிகளில்
உன்
குப்பையைக் கொட்டாதே. . .
இதயத்தைப் பூக்கூடையாக்கி
ஏந்திச் செல் !

## 8. சாதி மத சமயப்பூசல்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய

அழுக்கு நாட்காட்டிகள்!
மூலையில் வீசவேண்டிய
அவற்றிலா
முகம்பார்த்துக்கொள்கிறாய்?
விடிகாலைப் பொழுதுகளில்
ஏராளமான கண்ணாடிகளை
ஏந்திப்
புன்னகை செய்கின்றன
பூக்கள்

அந்தப் பனித்துளிகளில் உன்னைப்
பார்த்துக் கொள் !
தூசி துப்பட்டைகளை
ஒதுக்கித் தள்ளும்போது
துடைப்பங்கள் அழுவதில்லை

பொய்ம்மையைக் கொளுத்து !
போகியை நடத்து !
கண்ணீரிலா துவைப்பது
கைக்குட்டைகளை?
கசக்கியா பிழிவது
இதயங்களை?
தமிழ்ச்சங்கங்களில்
தீர்மானம் போடு
சாதிச் சங்கங்களைக்
கலைத்துவிடு !
காதலோடு உன்னைத்
தீண்டுகிறது காற்று !

அதன்
சிறகுகளில் தீவைக்காதே !
பசியோடு அமர்ந்திருக்கிறது
பானை ! அதன்
அடுப்பில் நெருப்பு மூட்டு !
வழங்குவோம் இந்த
பூமிக்கு வரம். . .
இனி. ..
தேசமே சமத்துவபுரம் !
உலகமே சமாதானபுரம் !

ஏனைய பகுதிகளில் மாற்றமில்லை

**இரண்டாம் பருவம்**

**பாடத்திட்டம் - பகுதி -1. தாள் -2.**

(செய்யுள் , உரைநடை, இலக்கிய வரலாறு, விண்ணப்பம் வரைதல்)

அலகு - 1 திருக்குறள் - ( மூன்று அதிகாரங்கள் )

அ. நட்பு
ஆ. நட்பாராய்தல்
இ. கூடா நட்பு

2. மூதுரை - ஔவையார் 1-15 (15 பாடல்கள்)
3. பழமொழி நானூறு கல்வி 10 பாடல்கள்

அலகு - 2

1. நந்திக்கலம்பகம்
2. திருப்பாவை, திருவெம்பாவை
3. சித்தர்பாடல்கள்

அலகு -3 **உரைநடை**

1. சங்கநெறிகள் - முனைவர் . வ.சுப.மாணிக்கம்.
2. இன்றைய சூழலில் மகளிரின் பணி- மீனாட்சி
3. புதிர் எதிர் காலம் - சிற்பி பாலசுப்பிரமணியம்
4. இணையத் தமிழ் வளர்ச்சி - முனைவர் ப.அர.நக்கீரன்.

அலகு - 4

1. வல்லினம் மிகும் இடம் - மிகா இடம்.
2. வினா- விடை வகைகள் (அறுவகை வினா, எண்வகை விடை, தொல்காப்பியர் வழியில்).
3. ஆகுபெயர் விளக்கம் - பயன்பாடு-வகைகள் 10

அலகு- 5

**இலக்கிய வரலாறு பாடத்திட்டத்தைத் தழுவியது**

1. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள
2. தமிழ் உரைநடையின் தோற்றமும் - வளர்ச்சியும்

**பயிற்சிக்குரியன**

3. விண்ணப்பங்கள் , மடல்கள், எழுதச்செய்தல்.

**இரண்டாம் பருவம் வினாத்தாள் அமைப்பு**

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 75

பிரிவு - அ

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 10 x 1 = 10

பிரிவு -ஆ

**இரண்டு பக்க அளவில் விடையளி** 5 x 5 = 25

செய்யுள் - 2 வினாக்கள்
உரைநடை - 2 வினாக்கள்
அலகு - 4 - 1 வினா

பிரிவு - இ

**கட்டுரை வடிவில் விடை எழுதுக** 5 x 8 = 40
செய்யுள் - 2 வினாக்கள்
உரைநடை - 1 வினாக்கள்
இலக்கிய வரலாறு - 1 வினா
பயிற்சிக்குரியன (மடல்கள் , விண்ணப்பங்கள்) 1 வினா

**குறிப்பு :** ஆ, இ பிரிவுகளுக்குரிய வினாக்கள் ‘இது’ அல்லது ‘அது’ என்ற வகையில் அமைதல் வேண்டும்.

அ பிரிவு வினாக்கள் ஐந்து அலகுகளிலிருந்தும் கேட்கப்படல் வேண்டும்.

**மூதுரை —— ஔவையார்**

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா- நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லான் 1

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர் 2

இன்னா இளமை வறுமைவந் தெய்தியக்கால்
இன்னார் அளவில் இனியவும் - இன்னாத
நாளல்லா நாள்பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக் கழகு 3

அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லரர் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும் 4

அடுத்து முயன்றாலும் ஆகுநா ளன்றி
எடுத்த கருமங்கள் ஆகா - தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா 5

உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ - கற்றூண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரம் தாங்கில்
தளர்ந்து வளையுமோ தான் 6

நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம்நுண்ணறிவு - மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகுமாம் குணம் 7

நல்லாரைக் காண்பதும் நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதும் நன்றே அவரோ
டிணங்கி இருப்புதுவும் நன்று 8

தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார் சொல் கேட்பதுவும் தீதே - தீயார்
குணங்கள் உரைப்பதும் தீதே அவரோ

பிணங்கி இருப்பதுவுந் தீது. 9

நெல்லுக் கிறைத்த நீர்வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கெ பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை 10

பண்டு முளைப்ப தரிசியே ஆனாலும்
விண்டுமி போனால் முளையாதாம் - கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும்ஆகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல் 11

மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா - கடல்பெரிது
மண்ணீரு மாகா(து) அதனருகெ சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும் 12

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - அவை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நன் மரம் 13

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத் -தானுந்தன்
பொல்லாச் சிறகை விரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி 14

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகாரம் ஆனாற்போல் - பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மே லிட்ட கலம் 15

## பழமொழி நானூறு

### கல்வி

ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்
போற்றும் எனவும் புணருமோ - ஆற்றச்
சுரம்போக்கி உல்குகொண்டார் இல்லையே இல்லை
மரம்போக்கிக் கூலிக்கொண் டார் 1

சொற்றெறும் சோர்வு படுதலால் சோர்வின்றிக்
கற்றொறும் கல்லாதேன் என்று வழியிரங்கி
உற்றொன்று சிந்தித்து உழன்று ஒன்று அறியுமேல்
கற்றொறுந் தான் கல்லாத வாறு 2

விளக்கு விலைகொடுத்துக் கோடல் விளக்குத்
துளக்கம்இன்று என்றனைத்தும் தூக்கி விளக்கு
மருள்படுவ தாயினும் மலைநாட என்னை
பொருள் கொடுத்துக் கொள்ளார் இருள் 3

ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை - அந்நாடு
வேற்றுநா டாகா தமவே யாம் ஆயினால்
ஆற்றுணா வேண்டுவ தில் 4

உணற்குஇனிய இன்னீர் பிறிது உழிஇல் என்னும்
கிணற்று அகத்து தேரை போல் ஆகார் - கணக்கினை
முற்றப் பகலும் முனியாது இனிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று 5

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப - நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும் 6

புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக கவர்க்கே புலனாம் - நலமிக்க
பூம்புனல் ஊர பொதுமக்கட்கு ஆகாதே
பாம்பறியும் பாம்பின் கால் 7

நல்லார் நலத்தை உணரின் அவரினும்
நல்லார் உணர்ப பிறருணரார் - நல்ல
மயிலாடு மாமலை வெற்ப மற்று என்றும்
அயிலாலே போழ்ப அயில் 8

கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பார் - தெற்ற
அறைகல் அருவி அணிமலை நாட
நிறைகுடம் நீர்தளும்பல் இல் 9

விதிப்பட்ட நூலுணர்ந்து வேற்றுமை இல்லார்
கதிப்பவர் நூலினைக் கையிகந்தா ராகிப்
பதிப்பட வாழ்வார் பழியாய செய்தல்
மதிப்புறத்துப் பட்ட மறு. 10

**நந்திக் கலம்பகம்**

இந்நூல் மூன்றாம் நந்திவர்மன் மீது பாடப்பெற்றதாகும். இது ஏனைய கலம்பங்களைப் போல் அல்லாது ஒரு வரலாற்ற நூலாக விளங்குகிறது. இந்நூலை பாடியவர் யாரென்று தெரியவில்லை. இந்நூலின் காலம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். ஆகவே இதுவே கலம்பகங்களுக்கெல்லாம் முதன்மையானது எனக் கொள்ளலாம்.

**நந்தி மன்னனின் அரண்மனைச்சிறப்பு**

பாடிய நாவலரோ வேந்தரோ பல்புரவிப்
பீடியல் மாகளிற்றார் பிச்சத்தார் - கூடார்
படையாறு சாயப் பழையாறு வென்றான்
கடையாறு போந்தார் கலந்து.

**பாட்டுடைத் தலைவன் பெருமை கூறல்**

குலமரபும் ஒவ்வாது பயின்றுவந்த
குடித்தொழிலும் கொள்படையின் குறையும் கொற்றச்
சில அளவுஞ் சிந்தியாத் தெவ்வர் தேயத்
தெள்ளாற்றில் செருவென்ற செங்கோல் நந்தி
புலஅரசைப் புறங்கண்ட புகழ்சேர் கோவே
பூவலயம் தனிற்கரியாய் நின்ற மன்னா
சொலவரிய திருநாமம் உனக்கே அல்லால்
சொல்ஒருவர்க் கிசையுமோ தொண்டைக் கோவே.

**மன்னன் மாலையின் மாண்பு**

என்னையா னேபுகழ்ந்தேன் என்னாதே எப்புவிக்கும்
மன்னர்கோன் நந்தி வரதுங்கன் - பொன்முடியின்
மேல்வருடும் தொண்டை விரைநாறும் இன்னமும் என்
கால்வருடும் சேடியர்தம் கை.

தொடர்ந்து பலர் இரந்த தொண்டையந்தார் நாங்கள்
நடந்த வழிகள் தொறும் நாறும் - படர்ந்த
மலைகடாம் பட்டனைய மால்யானை நந்தி
முலைகடாம் பட்டசையா முன்.

**நந்தியின் கொடைப்பெருமை**

இந்தப் புவியில் இரவலருண் டென்பதெல்லாம்
அந்தக் குமுதமே அல்லவோ- நந்தி
தடங்கைப்பூ பாலன்மேல் தண்கோவை பாடி
அடங்கப்பூ பாலரா னார்.

செய்ய கமலத் திருவுக்கு முன்பிறந்த
தையல் உறவு தவிர்ந்தோமே – வையம்
மணக்கும் பெரும்புகழான் மானபரன் நந்தி
இணக்கம் பிறந்தநாள் இன்று.

**நந்தியின் நாட்டில் முத்துச்சிறப்பு**

அடிவிளக் கும்துகில் ஆடை விளக்கும் அரசர்பந்திப்
பிடிவிளக் கும்எங்கள் ஊரார்விளங்கும் பெரும்புகழால்
படிவிளக் கும்நந்தி எங்கோன் பெரும்படை வீட்டுக் கெல்லாம்
விடிவிளக் கும்இது வேநாங்கள் பூண்பதும் வெண்முத்தமே.

**கையறுநிலை**

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
 மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
 கற்பகம் அடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்
 செந்தழல் அடைந்ததுன் தேகம்
நானும் என்கலியும் எவ்விடம் புகுவோம்
 நந்தியே நந்தயா பரனே.

**ஆண்டாள் அருளிய திருப்பாவை**

பாவைநோன்பைப் பற்றி ஆண்டாள் பாடிய முப்பது பாடல்களே திருப்பாவை என்று அழைக்கப்படுகிறது. பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவரான பெரியாழ்வாருக்கு பூமியிலிருந்து கிடைத்த மகள்தான் கோதை என்ற ஆண்டாள். இவர் கண்ணனின் தீவிர பக்தை. அவரையே நினைத்திருந்து கடைசியில் ஸ்ரீரங்கத்தில் அவரையே மணந்து அவரால் ஆட்கொள்ளப்பட்டவர்.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில்,
 நீராடப்போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!
சீர்மல்கும் ஆயர்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
 கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்

கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே, நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்! 1

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்குச்
செய்யுங் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி,
நெய்யுண்ணோம், பாலுண்ணோம், நாட்காலை நீராடி
மையிட் டெழுதோம், மலரிட்டு நாம் முடியோம்.
செய்யா தனசெய்யோம், தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையம் ஆந்தனையம் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய் 2

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினால்,
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப,
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். 3

ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி,
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடையப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து,
தாழாதே சாரங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 4

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை,
தூய பெருநீர் யமுனைத் துறைவனை,
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை,
தூயோம்ஆய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்

தீயினில் தூசுஆகும் செப்பேலோ ரெம்பாவாய். 5

புள்ளும் சிலம்பினகாண், புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய், பேய்முலை நஞ்சுண்டு,
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை,
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 6

கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தன்கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்தத் தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ?
தேசமுடையாய்! திறவேலோ ரெம்பாவாய். 7

கீழ்வானம் வெள்ளென்று, எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண், மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்துன்னைக்
கூவுவான் வந்து நின்றோம், கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய், பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை, மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 8

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய,
தூமங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்,
மாமீர்! ஆவளை எழுப்பீரோ! உம்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
‘மாமாயன், மாதவன், வைகுந்தன்’ என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். 9

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
    மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்?
நாற்றத் துழாய்முடி நாரா யணன்நம்மால்
    போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
    தோற்றம் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!
    தேற்றமாய் வந்து திறவேலா ரெம்பாவாய். 10

**மாணிக்கவாசகர் இயற்றிய திருவெம்பாவை**

மாணிக்கவாசகர் மதுரைக்கு அருகிலுள்ள திருவாதவூரில் பிறந்தார். இதனால் இவருக்குத் திருவாதவூரர் என்ற பெயரும் உண்டு. இவரின் நூல்களான திருவாசகமும், திருக்கோவையாரும் வைசத்திருமுறைகள் பன்னிரண்டினுள் எட்டாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளன. திருவண்ணாமலையில் இவர் பாடிய பாடல்களே திருவெம்பாவை எனப்படுகின்றன. இப்பாடல்களில் தன்னை ஒரு பெண்ணாகப் பாவித்து மார்கழி மாதக் காலையில் சிவனைக் குறித்துப்பாடுவது போல் பாடியுள்ளார்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
    சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடஙகண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
    மாதேவன்வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
    போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேஎன்னே
    ஈதே எம்தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
    பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
    சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்தற்குக்
    கூசு மலர்ப்பாதம் தந்தருள் வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
    ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய் 2

முத்தன்ன வெண்ணகையாய் மன்வந்தெதிரெழுந்தென்
    அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துள் கடை திறவாய்
    பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்

புத்தடியோம் புன்மைதீர்த்தாட்கொண்டாற்பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒள்நித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாம் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோ ம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடை திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்(று)
ஓலமிடினும் உணராய் உணராய்காண்
ஏலக்குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாயின்னந்துயிலுதியோ

வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
    என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
    ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
பரஞ்சோதி கேழில் பரங்கருணை
    கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிய தென்ன உறக்கமோ வாய்திறவாய்
    ஆழியான் அன்புடைமை யாமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
    ஏழைபங் காளனையே பாடலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
    பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன்சீரடியோம்
    உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவர் உகந்து
    சொன்ன பரிசே தொழும்பாயப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
    என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் எழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
    போதார்புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
    வேதமுதல் விண்ணாரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தோண்டருளன்
    கோதில் கலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
    ஏதவினைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

**சித்தர் பாடல்கள்**

**பெரிய ஞானக்கோவை**

**சிவவாக்கியர் பாடல்**

சித்தர் இலக்கியத்தில் சிவவாக்கியர் பாடலுக்குத் தனி மரியாதை தரப்படுவதுண்டு. காரணம், இவர் பாடல்களில் வழக்கமான சித்தர் கருத்துக்கான யோகம், குண்டலினி, நிலையாமை, வாசி கருத்துக்களுடன் புரட்சிகரமான கருத்துக்களையும் கூறுவதால் இவர் புரட்சிச் சித்தர் என்றும் கூறப்படுகின்றார். சமுதாயப் புரட்சி செய்த இந்தச்

சித்தர் ஆரம்ப காலங்களில் நாத்திகராக இருந்து ஆத்திகராக மாறினார் என்பதை இவரின் பாடல் கருத்துக்கள் புலப்படுத்துகின்றன.

நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுஷ்பந் சாத்தியே
சுற்றிவந்து முணுமுணென்று சொல்லு மந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ.

ஓசையுள்ள கல்லைநீ உடைத்திரண்டாய் செய்துமே
வாசலிற் பதித்தகல்லை மழுங்கவே மிதிக்கின்றீர்
பூசனைக்கு வைத்த கல்லில் பூவும் நீரும் சாத்து கிறீர்
ஈசனுக்குகந்த கல்லெந்தக் கல்லு சொல்லுமே.

பண்ணிவைத்து கல்லையும் பழம்பொருளது என்றுநீர்
எண்ணம் உற்றும் என்னபேர் உரைக்கின்றீர்கள் ஏழைகாள்
பண்ணவும் படைக்கவும் படைத்துவைத்து அளிக்கவும்
ஒண்ணும் ஆகி உலகு அளித்த ஒன்றை நெஞ்சில் உன்னுமே.

ஊரில் உள்ள மனிதர்காள் ஒருமனதாய்க் கூடியே
தேரிலே வடத்தை விட்டு செம்பை வைத்து இழுக்கின்றீர்
ஆரினாலும் அறியொணாத ஆதிசித்த நாதரை
பேதையான மனிதர் பண்ணும் புரளி பாரும் பாருமே.

பூசைபூசை யென்றுநீர் பூசைசெய்யும் பேதைகாள்
பூசையுன்ன தன்னிலே பூசைகொண்ட தெவ்விடம்
ஆதிபூசை கொண்டதோ வனாதிபூசை கொண்டதோ
ஏதுபூசை கொண்டதோ வின்னதென் றியம்புமே.

**கடுவெளிச்சித்திர் பாடல்**

கடுவெளி என்பது வெட்டவெளி அதாவது பிரமம். இந்தச் சித்தர் பிரபஞ்சத்தை வெட்ட வெளியாகக் கண்டு தம் ஆத்மானுபவத்தைப் பிறரும் அறிந்து நலம் பெறுவதற்காகப் பாடிய பாடல்கள் கடுவெளிச் சித்தர் பாடல்களாக நமக்கு அறிமுகமாகின்றன. இவரது இயற்பெயரோ வரலாறோ தெரியாத நிலையில் இவரது ஜீவசமாதி காஞ்சிபுரத்தில் இருக்கிறது என்ற செய்தியை மட்டும் போகர் தெரிவிக்கின்றார்.

**ஆனந்தக்களிப்பு**

பாபஞ்செய் யாதிரு மனமே – நாளைக்

கோபஞ்செய் தேயமன் கொண்டோடிப் போவான்
பாபஞ்செய் யாதிரு மனமே. 1

சாபங்கொடுத்திட லாமோ – விதி
தன்னைநம் மாலே தடுத் திடலாமோ
கோபந் தொடுத்திட லாமோ - இச்சை
கொள்ளக் கருத்தைக் கொடுத்திட லாமோ. 2

சொல்லருஞ் சூதுபொய் மோசம் - செய்தாற்
சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும் நாசம்
நல்லபத் திவிசு வாசம்- எந்த
நாளும் மனிதர்க்கு நன்மையாம் நேசம். 3

நீர்மேற் குமிழியிக் காயம் - இது
நில்லாது போய்விடும் நீயறி மாயம்
பார்மீதில் மெத்தவம் நேயம் - சற்றும்
பற்றா திருந்திடப் பண்ணு முபாயம். 4

நந்த வனத்திலோ ராண்டி – அவன்
நாலாறு மாதமாயக் குயவனை வேண்டி
கொண்டுவந் தானொரு தோண்டி – மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி. 5

**இடைக்காட்டுச் சித்தர் பாடல்கள்**

இடைக்காடு என்னும் ஊரினர். இடையர் குடியிலே பிறந்தவர். இதனால் இடைக்காடுச் சித்தர் எனப் பெயர் பெற்றார். இடைக்காடு – முல்லை நிலம். இங்கு ஆடு மாடு மேய்ப்பவர் - இடையர் - கோனார் எனப்படுவர். இக்கோனாரையும் ஆடுமாடுகளையும், முன்னிறுத்தி பாடியதால் இப்பெயர் பெற்றார் என்பர்.

எல்லா உலகமும் எல்லா உயிர்களும்
எல்லா பொருள்களும் எண்ணரிய
வல்லாளன் ஆதிபரம சிவனது
சொல்லால் ஆகுமே கோனாரே.

வானியல் போல் வயங்கும் பிரமமே
சூனியம் என்றறிந்து ஏத்தாக்கால்
ஊனியல் ஆவிக்கு ஒருகதி இல்லையென்று
ஓர்ந்து கொள்ளுவீர் நீர் கோனாரே.

முத்திக்கு வித்தான மூர்த்தியைத் தொழுது
முத்திக்கு உறுதிகள் செய்யாக்கால்
சித்தியும் பத்தியும் சத்தியும் முத்தியும்
சேரா வாகுமே கோனாரே.

தொல்லைப் பிறவியின் தொந்தமுற்ற அறவே
சோம்பலற்றுத் தவஞ் செய்யாக்கால்
எல்லையில் கடவுள் எய்தும் பலம் உமக்கு
இல்லையென்ற எண்ணுவீர் கோனரே.

ஆரண மூலத்தை அன்புட னேபர
மானந்தக் கோலத்தைப் பண்புடனே
பூரணமாகவே சிந்தித்து மெய்ஞ்ஞானப்
போதத்தைச் சார்ந்திரும் கோனாரே.

( ஏனைய பகுதிகளில் மாற்றமில்லை )

**மூன்றாம் பருவம் - பகுதி - 1**
**தமிழ்த்தாள் - 3**

( பாடப்பகுதி செய்யுள், புதினம், இலக்கணம், இலக்கிய வரலாறு, பயிற்சிக் கட்டுரை)

பொருளடக்கம்

அலகு - 1.சிலப்பதிகாரம் - புறஞ்சேரி இருத்த காதை
2.மணிமேகலை - மணிபல்லவத்துத் துயருற்ற காதை
3.சீவக சிந்தாமணி -சுரமஞ்சரியார் இலம்பகம் - 1996 முதல் 2047 முடிய உள்ளபாடல்கள்.

அலகு -2. 1. கம்பராமாயணம் - கைகேயி சூழ்வினைப்படலம்- முதல் 205- 244 வரை உள்ள பாடல்கள்
2.இரட்சணிய யாத்திரிகம் - குமார பருவம் - சிலுவையைச் சுமத்திக்கொண்டு போதல்

**நடைமுறை சமூகச் சிந்தனை**

அலகு -3. புதினம் - 'ஓடைப்புல் ' சி.ஆர்.ரவீந்திரன்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
சென்னை.

அலகு - 4. அணியிலக்கணம் ( பாடப்பகுதியை ஒட்டியவை )

1. நிலைமண்டில ஆசிரியப்பா, அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், கலி விருத்தம்
2. உவமையணி, பண்பு உவமை, தொழிலுவமை, பயனுவமை.
3. உருவக அணி - விளக்கம் மட்டும்.
4. தற்குறிப்பேற்ற அணி ( 2 ) மட்டும்.
5. இல்பொருள் உவமை அணி.

அலகு -5. இலக்கிய வரலாறு

1. ஐம்பெருங்காப்பியங்கள் - புதினத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - புதின வகைகள் - வரையறைகள்
2. பொதுக்கட்டுரை

**மூன்றாம் பருவம் பகுதி - 1, தாள் -3. வினாத்தாள் அமைப்பு**

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 75

பிரிவு - அ

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 10 x 1 = 10

பிரிவு -ஆ

**இரண்டு பக்க அளவில் விடையளி** 5 x 5 = 25

செய்யுள் - 2 வினாக்கள்
உரைநடை - 1 வினா
அலகு -- 4 - 1 வினா
அலகு -5 - 1 வினா

பிரிவு - இ

**கட்டுரை வடிவில் விடை எழுதுக** 5 x 8 = 40

செய்யுள் - 2 வினாக்கள்
உரைநடை - 1 வினா
இலக்கிய வரலாறு - 1 வினா
பொதுக்கட்டுரை - 1 வினா

**குறிப்பு :** ஆ, இ பிரிவுகளுக்குரிய வினாக்கள் 'இது' அல்லது 'அது' என்ற வகையில் அமைதல் வேண்டும்.
அ பிரிவு வினாக்கள் ஐந்து அலகுகளிலிருந்தும் கேட்கப்படல் வேண்டும்

**நான்காம் பருவம் - பகுதி - 1, தாள் -4. பாடத்திட்டம்**

( செய்யுள் , நாடகம், இலக்கணம், இலக்கிய வரலாறு, படைப்பிலக்கியப் பயிற்சி )

**அலகு -1 எட்டுத்தொகை**

1. குறுந்தொகை - 7 பாடல்கள் ( 63,75, 79, 131, 251, 260, 262, )
2. நற்றிணை - 4 பாடல்கள் ( 150, 152, 155, 158)
3. அகநானூறு - 2 பாடல்கள் ( 66,106)
4. கலித்தொகை - 2 பாடல்கள் - குறிஞ்சிக்கலி (41, 62)

5. புறநானூறு- 3 பாடல்கள் (3,5,9 )

**அலகு -2. பத்துப்பாட்டு**

1. நெடுநல்வாடை முழுதும்.

**அலகு -3 நாடகம்**

**"வைகையில் வெள்ளம் வரும் "** ___ ( குறு நாடகங்கள்)

சேதுபதி.

பாவை பப்ளிகேஷன்ஸ். சென்னை.

**அலகு -4. பொருள் புலப்பாட்டுத் திறன்**

1. இலக்கிய வரலாறு - சங்க இலக்கியம், எட்டுத்தொகை- பத்துப்பாட்டு

   நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

2. இலக்கணம் - பாடப்பகுதியை ஒட்டிய அகப்புற இலக்கணங்களைப் பொருத்திக்காட்டல்

**அலகு -5. படைப்பிலக்கியப் பயிற்சி**

1. கவிதை , சிறுகதை, நூல் மதிப்பீட்டுப் பயிற்சி

   ஏதேனும் ஒரு கருவைக் கொடுத்து கதை, கவிதை எழுதச் செய்தல்

   ஏதேனும் ஒரு நூலினை மதிப்பீடு செய்தல்

**நான்காம் பருவம் - வினாத்தாள் அமைப்பு**

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 75

பிரிவு - அ

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 10 x 1 = 10

பிரிவு -ஆ

**இரண்டு பக்க அளவில் விடையளி** 5 x 5 = 25

செய்யுள் - 3 வினாக்கள்
நாடகம் - 2 வினா

பிரிவு - இ

**கட்டுரை வடிவில் விடை எழுதுக** 5 x 8 = 40

செய்யுள் - 2 வினாக்கள்
நாடகம் - 1 வினா
இலக்கிய வரலாறு - 1 வினா
பயிற்சிக்குரியன - கதை. கவிதை எழுதச்செய்தல், நூல் மதிப்பீடு 1 வினா

**குறிப்பு :** ஆ, இ பிரிவுகளுக்குரிய வினாக்கள் 'இது' அல்லது 'அது' என்ற

வகையில் அமைதல் வேண்டும்.

குறுந்தொகை
தோழி கூற்று

**தோழி இரவுக்குறி மறுத்தது.**

1. கருங்கண் தாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்
சாரல் நாட நடுநாள்
வாரல் வாழியோ வருந்துதும் யாமே
- கடுந்தோட் கரவீரனார்

**தலைவி கூற்று**
**தலைமகன் வரவுணர்த்திய பாணற்குத் தலைமகள் கூறியது.**

2. நீ கண் டனையோ கண்டார்க் கேட்டனையோ
ஒன்று தெளிய நசையினம் மொழிமோ
வெண்கோட் டியானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறிஇயர்
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே
- படுமரத்து மோசிகீரனார்

**தலைவி கூற்று**
**பொருள் வயின் பிரிந்த தலைமகனை நினைந்த தலைவி தோழிக்குச் சொல்லியது**

3. கான யானை தோனயந் துண்ட
பொரிதாள் ஓமை வளிபொரு நெடுஞ்சினை
அலங்கல் உலவை யேறி ஒய்யெனப்
புலம்புதரு குரல புறவுப்பெடை பயிரும்
அத்தம் நண்ணிய அங்குடிச் சீறூர்ச்
சேந்தனர் கொல்லோ தாமே யாந்தமக்கு
ஒல்லேம் என்ற தப்பற்
சொல்லா தகறல் வல்லு வோரே .
- குடவாயிற் கீரத்தனார்

**தலைவன் கூற்று**
**வினை முற்றிய தலைமகன் பருவவரவின் கண் சொல்லியது.**

4. ஆடமை புரையும் வனப்பிற் பணைத்தோள்
பேரமர்க் கண்ணி யிருந்த ஊரே
நெடுஞ்சேண் ஆரிடை யதுவே நெஞ்சே
ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்து
ஓரேர் உழவன் போலப்
பெருவிதுப் புற்றன்றால் நோகோ யானே.
- ஓரேருழவனார்.

**தோழி கூற்று**
**பிரிவிடைத் தோழி பருவமன்று பட்டது வம்பு என்று வற்புறுத்தியது.**

5. மடவ வாழி மஞ்ஞை மாயினம்
கால மாரி பெய்தென அதனெதிர்

ஆலலு  மாலின பிடவும் பூத்தன
காரன் றிகுளை தீர்கநின் படரே
கழிந்த மாரிக் கொழ்ந்த பழநீர்
புதுநீர் கொளீஇய வுகுத்தரும்
நொதுமல் வானத்து முழங்குகுரல் கேட்டே

- இடைக்காடனார்.

**தோழி கூற்று**

**அவர் வரவிற்கு நிமித்தமாயின கண்டு ஆற்றாளாய தலைமகட்குத் தோழி சொல்லியது.**

6. குருகும் இருவிசும் பிவரும் புதலும்
வரிவண்  டூத வாய்நெகிழ்ந் தனவே
சுரிவளைப் பொலிந்த தோளுந் செற்றும்
வருவர்கொல் வாழி தோழி பொருவார்
மண்ணெடுத் துண்ணும் அண்ணல் யானை.
வண்தேர்த் தொண்டையர் வழையம லடுக்கத்துக்
கன்றி லோரா விலங்கிய
புன்றா ளோமைய சுரனிறந் தோரே.

- கல்லாடனார்

**தோழி கூற்று**

**உடன்போக்கு நேர்ந்த தோழி கிழத்திக்கு உடன்போக்கு உணர்த்தியது.**

7. ஊஉ ரலரெழச் சேரி கல்லென
ஆனா தலைக்கும் அறனி லன்னை
தானே இருக்க தன்மனை யானே
நெல்லி தின்ற முள்ளெயிறு தயங்க
உணலாய்ந் திசினா லவரொடு சேய்நாட்டு
விண்தொட நிவந்த விலங்குமலைக் கவாஅற்
கரும்பு நடு பாத்தி யன்ன
பெருங்களிற் றடிவழி நிலைஇய நீரே

- பாலை பாடிய பெருங்கடுங்கோ.

**தோழி கூற்று**

**அன்னை வெறியாட்டு எடுக்க கருதா நின்றாள் இனியாம் இதற்கு என்கொலோ செயற்பாலது எனத் தோழி தலைமகளுக்குத் தலைமகன் சிறைப்புறமாகக் கூறியது.**

8. மறிக்குர லறுத்துத் தினைப் பிரப் பிரீஇச்
சொல்லாற்றுக் கவலைப் பல்லியங் கறங்கத்
தோற்ற மல்லது நோய்க்குமருந் தாகா
வேற்றுப்பெருந் தெய்வம் பலவுடன் வாழ்த்திப்
பேஎய்க் கொளீஇயள் இவளெனப் படுதல்
நோதக் கன்றே தோழி மால்வரை
மழைவிளை யாடு நாடனைப்
பிழையே மாகிய நாமிதற் படவே

-பெருஞ்சாத்தனார்.

**தோழி கூற்று**

**பருவ வரவின்கண் வரவு நிமித்தம் தோன்றத் தோழி தலைமகளுக்கு உரைத்தது.**

9. முல்லை யூர்ந்த கல்லுய ரேறிக்
கண்டனம் வருகஞ் சென்மோ தோழி
எல்லூர்ச் சேர்தரும் ஏருடை யினத்துப்
புல்லார் நல்லான் பூண்மணி கொல்லோ
செய்வினை முடித்த செம்ம லுள்ளமொடு
வல்வில் இளையர் பக்கம் போற்ற
ஈர்மணற் காட்டாறு வரூஉம்

தேர்மணி கொல்லாண் டியம்பிய வுளவே

- ஒக்கூர் மாசாத்தியார்.

**தோழி கூற்று**

**தலைமகன் பிரிந்த வழி அவன் குறித்த பருவ வரவு எப்பொழுது வரும் எனத் தோழி அறிவரைக் கண்டு வினாயது.**

10. ஆசில் தெருவில் நாயில் வியன்கடைச்
செந்நெல் அமலை வெண்மை வெள்ளிழுது
ஓரிற் பிச்சை ஆர மாந்தி
அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்
சேமச் செப்பிற் பெறீஇயரோ நீயே
மின்னிடை நடுங்கும் கடைப்பெயல் வாடை
எக்கால் வருவ தென்றி
அக்கால் வருவரெங் காத லோரே.

- ஓரிற்பிச்சையார்

**நற்றிணை - 4 பாடல்கள் ( 150, 152, 155, 158)**

நற்றிணை ___ மருதத்திணை - துறை தலைநின்று ஒழுகப்படா நின்ற பரத்தை தலைவனின் நெருங்கிப் பாணர்க்குரைத்தது.

நகைநன் குடையன் பாணநும் பெருமகன்
மிளைவலி சிதையக் களிறுபல பரப்பி
அரண்பல கடந்த முரண்கொள் தானை
வழுதி வாழிய பலவெனத் தொழுதீண்டு
மன்னெயில் உடையோர் போல அஃதுயாம்
என்னலும் பரியலோ இலமெனத் தண்நடைக்
கலிமா கடை இ வந்தெம் சேரித்
தாருங் கண்ணியுங் காட்டி ஒருமைய
நெஞ்சம் கொண்டமை விடுமோ வஞ்சக்
கண்ணுடைச் சிறுகோல் பற்றிக்
கதம்பெரிது உடையள்யாய் அழுங்கலோ இலளே

- கடுவனிளமள்ளனார்.

திணை ___ நெய்தல் துறை - மடல்வலித்த தலைவன் முன்நிலை புறமொழியாகத் தோழிகேட்பச் சொல்லியது.

மடலே காமந் தந்தது அலரே
மிடைபூ எருக்கின் அலர்தந் தன்றே
இலக்குகதிர் மழுங்கி எல்விசும்பு படரப்
புலம்புதந் தன்றே புகன்றுசெய் மண்டிலம்
எல்லாந் தந்ததன் தலையும் பையென
வடந்தை துவலை தூவக் குடம்பைப்
பெடைபுணர் அன்றில் உயங்குகுரல் அளைஇக்
கங்குலும் கையறவு தந்தன்று
யாங்கா குவென்கொல் அளியேன் யானே.

- ஆலம்பேரி சாத்தனார்.

திணை - நெய்தல் துறை - இரண்டாம் கூட்டத்துத் தலைவியை எதிர்ப்பட்டுத் தலைவன் சொல்லியது.

ஒள்ளிழை மகளிரொடு ஓரையும் ஆடாய்
வள்ளிதழ் நெய்தல் தொடலையும் புனையாய்
விரிபூங் கானல் ஒருசிறை நின்றோய்
யாரை யோநின் தொழுதனம் வினவுதுங்
கண்டோர் தண்டா நலத்தை தெண்டிரைப்
பெருங்கடல் பரப்பின் அமர்ந்துறை அணங்கோ
இருங்கழி மருங்கு நிலைபெற் றனையோ
சொல்லினி மடந்தை என்றனென் அதனெதிர்
முள்ளெயிற்று முறுவலுந் திறந்தன
பல்லித முண்கணும் பரந்தவால் பனியே.

- பராயனார்.

திணை ___ குறிஞ்சி துறை ___ ஆறபார்த்துற்ற அச்சத்தாற் சிறைப்புறமாகச் சொல்லியது.

அம்ம வாழி தோழி நம்வயின்
யானோ காணேன் அதுதான் கரந்தே
கல்லதர் மன்னுங் கான்கொல் லும்மே
கனையிருள் மன்னுங் கண்கொல் லும்மே
விடர்முகைச் செறிந்த வெஞ்சின இரும்புலி
புகர்முக வேழம் புலம்பத் தாக்கிக்
குருதி பருகிய கொழுங்கவுள் கயவாய்
வேங்கை முதலொடு துடைக்கும்
ஓங்குமலை நாடன் வரூஉம் ஆறே

**புறநானூறு- 5 பாடல்கள் (3,9,10)**

திணை - பாடாண் துறை - செவியறிவுறூஉ

திணையும் துறையும் - அவை
பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதியை இரும்பிடத்தலையார் பாடியது.
உவவுமதி யுருவின் ஓங்கல் வெண்குடை
நிலவுக்கடல் வரைப்பின் மண்ணக நிழற்ற
ஏம முரசம் இழுமென முழங்க
நேமி யுய்த்த நேஎ நெஞ்சின்
தவிரா ஈகைக் கவுரியர் மருக,
செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ,
பொன்னோடைப் புகரணி நுதல்
துன்னருந்திறல் கமழ்கடாஅத்
தெயிறுபடையாக எயிற்கத விடாஅக்
கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கிற்
பெருங்கை யானை யிரும்பிடர்த் தலையிருந்து
மருந்தில் கூற்றத் தருந்தொழில் சாயாக்
கருங்கை யொள்வாட் பெரும்பெயர் வழுதி
நிலம்பெயரினும் நின்சொற் பெயரல்
பொலங்கழற்காற் புலர்சாந்தின்
விலங்ககன்ற வியன்மார்ப
ஊரில்ல உயவரிய

நீரில்ல நீளிடைய
பார்வ லிருக்கைக்கவிகண் ணோக்கிற்
செந்தொடை பிழையா வன்க ணாடவர்
அம்புவிட வீழ்ந்தோர் வம்பம் பதுக்கைத்
திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந் துயவும்
உன்ன மரத்த துன்னருங் கவலை
நின்னசை வேட்கையின் இரவலர் வருவரது
முன்ன முகத்தி னுணர்ந்தவர்
இன்மை தீர்த்தல் வன்மை யானே.

திணையும் துறையும் அவை
பொருண்மொழிக்காஞ்சியும் ஆகும்.
சேரமான் கருங்கை கருவோர் ஏறிய ஒள்வால் கோப்பெருஞ்சேரல் இரும்பொறையைக் கண்ட ஞான்று நின் உடம்பு பெறுவாயாக என அவனைச் சென்று கண்டு தம் உடம்பு பெற்று நின்ற நரிவெரூஉத் தலையார் பாடியது.

எருமை யன்ன கருங்கல் லிடைதோ
றானிற் பாக்கும் யானைய முன்பின்
கானக நாடனை நீயோ பெரும
நீயோ ராகலி னின்னொன்று மொழிவல்
அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரோ டொன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி
அளிதோ தானேயது பெறலருங் குரைத்தே

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடியது.

ஆவுமானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்திற்
கொல்களிற்று மீமிசை கொடிவிசும்பு நிழற்றும்
எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவி னெடியோன்
நன்னீர்ப் ப ஃறுளி மணலினும் பலவே

(ஏனைய பகுதிகளில் மாற்றமில்லை)

❂❂❂❂❂❂